**செய்தி வெளியீடு எண்: 77/2023** **நாள்: 30.06.2023**

**பத்திரிக்கைச் செய்தி**

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷன் இந்தியா லிமிடெட் (CAT1 உரிமம் பெற்றவர்) உடன் திறந்த அணுகல் மூலம் மின்சாரம் பெறுவதற்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது. இந்த முயற்சியானது சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் அதன் மின் கொள்முதல் செலவை மேம்படுத்த உதவுவதோடு, பசுமை மூலமான மின்சாரத்திற்கான அணுகலையும் வழங்கும். இந்திய பவர் எக்ஸ்சேஞ்ச் மூலம் மின்சாரம் பெறப்பட உள்ளது.

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் இயக்குநர் டாக்டர் பிரசன்ன குமார் ஆச்சார்யா, (நிதி) தலைமையில், சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் இயக்குநர் ராஜேஷ் சதுர்வேதி (அமைப்புகள் மற்றும் இயக்கம்) மற்றும் நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷன் இந்தியா லிமிடெட் பொது மேலாளர் பி.வாசுகி (வணிகம்) ஆகியோர் இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர். இந்நிகழ்வின் போது சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் மற்றும் நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷன் இந்தியா நிறுவனத்தின் உயர் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் உடன் இருந்தனர்.

**வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்**
**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னை – 600 035.**

@cmrlofficial Chennai Metro Rail @chennaimetrorail

@ChennaiMetroRail www.chennaimetrorail.org